**//மிக மிக அவசரம்//**

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண்.4933/ஆ5/2023, நாள்.30.11.2023**

.....

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – மகாகவி சுப்ரமணிய பாரதியார் பிறந்த நாளை முன்னிட்டு இந்திய மொழிகள் உற்சவம் நடத்துதல் – வழிகாட்டும் நெறிமுறைகள் வழங்குதல் – தொடர்பாக |
| பார்வை | சென்னை –6, பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.69205/எம்/இ2/2023, நாள். 28.11.2023 |

•••••

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் பிறந்த நாளை சிறப்பிக்கும் வகையில் இந்திய மொழிகள் உற்சவம் 2023 டிசம்பர் 11 வரை நடத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. இணைப்பு –1ல் வழங்கப்பட்டுள்ள 11 வகையான தலைப்புகளில் குறிப்பிட்டுள்ள செயல்பாடுகளை கொடுக்கப்பட்டுள்ள நாட்களில் மாணவர்களிடையே நடத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து வகையான பள்ளிகளிலும் பள்ளிகளின் பயிற்று மொழி வழியாக இச்செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பள்ளிகளில் மாணவர்களிடையே கொடுக்கப்பட்டுள்ள நாட்களில் குறிப்பிட்டுள்ள செயல்பாடுகள் நடத்தப்படவேண்டும். பள்ளிகளில் 01.12.2023 முதல் 11.12.2023 வரை நடத்தப்படும் செயல்பாடுகளுக்கான புகைப்பட நகல் ( **Image copy)** மற்றும் **காணொலி பதிவு (video)** செயல்பாடுகள் நடைபெறும் நாளில் மாலை 4.00 மணிக்குள் இவ்வலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு velloreceo@gmail.com அனுப்பிவைக்குமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது

இணைப்பு – படிவம்

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்,

வேலூர்.

பெறுநர் –

தலைமையாசிரியர்கள்,

அனைத்து வகை பள்ளிகள்,

வேலூர் மாவட்டம்.

நகல்–

1. சென்னை–6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி/தனியார் பள்ளிகள்)
   வேலூர் மாவட்டம்.
   (தங்கள் ஆளுகையின் கீழ் செயல்படும் பள்ளிகளுக்கு தெரிவித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)